வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ராமசுப்பிரமணியன் கிருஷ்ணமூர்த்தி

தேதி 30.03.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்பு செய்திகள்

நீராதாரங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்றைய 120 ஆவது மன் கீ பாத் நிகழ்ச்சியில் வலியுறுத்தி உள்ளார்.

சைத்ர நவராத்திரியை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் பிரம்மாவின் ஒரு பகுதியாக இந்தியா சார்பில், 52 டன் பேரிடர் நிவாரண பொருட்கள் மியான்மருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ரமலான் பண்டிகை அனைவரது வாழ்விலும் அன்பு, சகோதரத்துவம், ஈகை, வலிமை, மற்றும் வளமான வாழ்வை கொண்டு வந்து சேர்க்கட்டும் என புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

*மன் கீ பாத்* 1 (16)

நீராதாரங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார். அகில இந்திய வானொலியில் இன்று காலை ஒலிபரப்பான பிரதமரின் 120 ஆவது மன் கீ பாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இந்தியாவின் பல மாநிலங்களில் நீர் சேமிப்பு தொடர்பான பணிகள் புதிய வேகம் கண்டிருப்பதாகவும், ஜல் சக்தி அமைச்சகமும், பல்வேறு தன்னார்வல அமைப்புகளும் இதற்காக

பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார். இந்தியாவில் ஆயிரக்கணக்கான செயற்கை குளங்கள், தடுப்பணைகள், ஆழ்குழாய் கிணறுகளின் மறுசெறிவு ஆகியவை நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். Catch the Rain இயக்கத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மழை நீர் சேகரிப்பை செயல்படுத்தப்பட்டு வருகிறது. மழை நீரை சேகரிப்பதன் மூலம், நாம் தண்ணீரை வீணாக்காமல் சேமிக்க முடியும் என்றும், கடந்த சில ஆண்டுகளில் இந்த இயக்கம் நீர் பாதுகாப்பு தொடர்பான பல முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. கடந்த 8 ஆண்டுகளில் புதிதாக உருவாக்கப்பட்ட கண்மாய்கள், குளங்கள், மற்றும் நீர் மறுசெறிவு அமைப்புகளால் 11 பில்லியன் க்யூபிக் மீட்டரை விட அதிக அளவு நீர் சேமிக்கப் பட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

*மன் கீ பாத்* 2 (17)

கேலோ இண்டியா பாரா விளையாட்டு போட்டியில் பங்கேற்ற வீரர்-வீராங்கனைகள் 18 தேசிய சாதனைகளை படைத்துள்ளது பாராட்டுதல்களுக்கு உரியது என்று பிரதமர் கூறினார். பல சவால்களை தாண்டி உறுதியை வெளிப்படுத்திய கேலோ இண்டியா பாரா விளையாட்டுகளில், நம் விளையாட்டு வீரர்கள் தங்களுடைய ஈடுபாடு மற்றும் திறமைகளை வெளிப்படுத்தி அனைவரையும் வியக்க செய்துவிட்டதாக பிரதமர் தெரிவித்தார். முன்பை விட இம்முறை அதிக விளையாட்டு வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்றதாகவும், இதில் விளையாடிய அனைத்து வீரர்களுக்கும் அவர்களின் முயற்சிக்கும் பாராட்டு தெரிவிப்பதாகவும் அவர் கூறினார். அரியானா, தமிழ்நாடு மற்றும் உத்திரபிரதேசத்தின் விளையாட்டு வீரர்கள் முறையே முதல் 3 இடங்களை பெற்றதற்கு அவர் வாழ்த்து தெரிவித்தார். இதன் மூலம், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் 18 தேசிய சாதனைகளை படைத்திருப்பதாகவும், அதில் 12 பெண் விளையாட்டு வீரர்கள் அடங்கி இருப்பதாகவும் பிரதமர் பெருமிதம் தெரிவித்தார். கேலோ இண்டியா பாரா விளையாட்டு

போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற மல்யுத்த வீரர் ஜாபி மேத்யூ நன்றி தெரிவித்து, தமக்கு எழுதியிருந்த கடிதத்தை மேற்கோள் காட்டிய பிரதமர்,

*மன் கீ பாத்* 3 (17)

ஒவ்வொரு மாற்றுத்திறனாளி வீரர்களின் முயற்சிகள் இந்தியர்கள் அனைவரையும் உத்வேகப்படுத்துவதாக தெரிவித்தார்.

ஜவுளித்துறையில் உருவாகும் கழிவுகளால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். உலகெங்கிலும் பழைய துணிகளை விரைவாக நீக்கி, புதிய ஆடைகளை வாங்கும் வழக்கம் அதிகரித்து வருவதாகவும், இதனால் ஜவுளித் துறையில் கழிவுகள் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். ஒரு ஆய்வின்படி, பழைய துணிகள் ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாக மட்டுமே மறுசுழற்சி செய்யப்படுவதாகவும், ஜவுளித்துறை கழிவுகளை ஏற்படுத்தும் உலகின் 3 ஆவது மிகப் பெரிய நாடாக இந்தியா விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த சவாலை எதிர்கொள்ள பல பாராட்டத்தக்க முயற்சிகளை இந்தியாவின் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் ஜவுளி மீட்டெடுப்பு தொடர்பான பணிகளை தொடங்கி இருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார். பழைய துணிகளையும், காலணிகளையும் மறுசுழற்சி செய்து தேவையானவர்களுக்கு பல தன்னார்வல நிறுவனங்கள் கொண்டு சேர்க்கின்றன. ஜவுளித்துறை கழிவுகளில் இருந்து அழகு பொருட்கள், கைப்பைகள், காகிதங்கள்,

*மன் கீ பாத்* 4 (18)

விளையாட்டு பொருட்கள் போன்ற பல பொருட்கள் உருவாக்கப்பட்டு வருவதாகவும், பல அமைப்புகள் சர்க்குலர் பேஷன் பிராண்டை பிரபலப்படுத்துவதாகவும் தெரிவித்தார். இதன் மூலம், நூதனமாக வடிவடைக்கப்பட்ட துணிகள் வாடகைக்கு கிடைப்பதாகவும், இன்னும் சில

அமைப்புகள் பழைய துணிகளை கொண்டு அவற்றை மீண்டும் பயன்படுத்தும் வகையில் தயார்படுத்தி ஏழை எளியவர்களுக்கு கொண்டு சேர்ப்பதாகவும் குறிப்பிட்டார். ஹரியானாவின் பானிபட்-ல் உள்ள ஜவுளிகளின் மறுசுழற்சியானது தங்களுக்கு என புதிய அடையாளங்களை ஏற்படுத்தி வருவதாகவும், பெங்களுருவிலும் நூதனமான தொழில்நுட்ப தீர்வுகளின் உதவியோடு, பிரத்யேக மறுசுழச்சி செய்து வருகின்றன என்றார். தமிழ்நாட்டின் திருப்பூர் கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி வாயிலாக ஜவுளித் துறை கழிவுகளின் மேலாண்மை மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் தெரிவித்தார். உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு உதவிடும் யோக கலை மற்றும் இந்திய மருத்துவ முறை உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து வருவதாக பிரதமர் குறிப்பிட்டார். சர்வதேச யோகா தினத்திற்கு இன்னும் 100 நாட்களுக்கும் குறைவாகவே இருப்பதாக அவர் தெரிவித்தார். 10 ஆண்டுகளுக்கு முன்பாக 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ம் தேதியன்று சர்வதேச



யோகா தினம் கொண்டாடப்பட்டதை சுட்டிக் காட்டிய அவர், தற்போது இந்த தினம் மகத்தானதொரு பெரு விழாவாக உருவெடுத்து உள்ளதாக கூறினார். மனித சமூகத்திற்கு பாரதத்தில் இருந்து ஒரு விலை மதிப்பில்லா வெகுமதியான யோகாவை வருங்கால சந்ததியினருக்கு நாம் கொண்டு சேர்க்க வேண்டும் என்றும், 2025 ஆம் ஆண்டில் யோகா தினத்தின் கருப்பொருளாக, Yoga for one earth, One health ஒரு பூமி-உடல் நலத்திற்கு ஒரு யோகக் கலை என்பதற்கேற்ப யோகாவின் வாயிலாக ஒட்டுமொத்த உலகையும் ஆரோக்கியமானதாக மாற்ற நாம் அனைவரும் ஈடுபட வேண்டும் என பிரதமர் வலியுறுத்தினார். இளைஞர்கள் இன்று பெரும் எண்ணிக்கையில் நமது பாரம்பரிய யோக கலை மற்றும் ஆயுர்வேதத்தில் ஈடுபட்டு வருவதாக குறிப்பிட்ட அவர், தென்னமெரிக்கா நாடான சிலேயில் ஆயுர்வேதம் பிரபலமடைந்து வருவதாக கூறினார்.

அந்நாட்டில் சோமோஸ் இண்டியா என்ற அணி சுமார் 10 ஆண்டுகளாக யோகா மற்றும் ஆயுர்வேதத்தை வளர்ப்பதில் முனைப்பு காட்டி வருவதையும் அவர் எடுத்துரைத்தார். அக்குழு ஆயுர்வேதம் மற்றும் யோக கலையோடு தொடர்புடைய தகவல்களை ஸ்பெனிஷ் மொழியில் மொழியாக்கம் செய்து அந்நாட்டு மக்களுக்கு இதுகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

*பிரதமர் மகராஷ்டிரா* (14)

பிரதமர் திரு நரேந்திர மோடி மகராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் சோலார் பாதுகாப்பு மற்றும் விண்வெளி நிறுவனத்தில் வெடிமருந்து சோதனை தளம், யூஏவி ஓடுதள வசதியை இன்று திறந்து வைத்தார். நாக்பூரில் மாதவ் நேத்ராலயா ப்ரீமியம் மையத்திற்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய பிரதமர், ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மலிவு விலையில் மருந்துகள் வாங்க மக்கள் மருந்தகங்கள் பெரிதும் உதவுவதாக தெரிவித்தார். நாடு முழுவதும் மருத்துவ கல்லூரிகள் மற்றும் அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தின் எண்ணிக்கை சமீபத்திய ஆண்டுகளில் இரட்டிப்பாகி உள்ளதாகவும் அவர் கூறினார். முன்னதாக, தீக்ஷா பூமிக்கு சென்ற அவர், இந்திய அரசியலமைப்பின் தந்தையான டாக்டர் பி ஆர் அம்பேத்கருக்கு அஞ்சலி செலுத்தினார்.

இதனை தொடர்ந்து, பிலாஸ்பூரில் 33 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான நிறைவுற்ற பணிகளை தொடக்கி வைத்து, புதிய திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

*சைத்ர நவராத்திரி* (8)

சைத்ர நவராத்திரியை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அன்னை வழிபாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்ட பண்டித் ஜஸ்ராஜின் பாடல் ஒன்றை சமூக ஊடகப்

பதிவில் பகிர்ந்த பிரதமர், சக்தி சாதனா என்ற இந்த புனித பண்டிகை ஒவ்வொருவரின் வாழ்விலும் தைரியம், கட்டுப்பாடு, வலிமையை கொண்டு வரட்டும் என பதிவிட்டுள்ளார். நவராத்திரியின் தொடக்கம் பக்தியின் புதிய பரவசத்தை எழுப்புவதாகவும், அன்னையின் இந்த பாடல் மெய்மறக்கச் செய்வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

*ராஜஸ்தான் தினம்* (10)

ராஜஸ்தான் தினத்தை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி ராஜஸ்தான் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அம்மாநிலம் தொடர்ந்து செழித்து வளரும் என்றும், சிறப்பான முன்னேற்றத்தை நோக்கிய இந்தியாவின் பயணத்தில் விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். மேலும், இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், அற்புதமான துணிச்சல், வீரத்தின் அடையாளமாக ராஜஸ்தான் விளங்குவதாகவும், அம்மாநிலத்தின் வளர்ச்சி புதிய அளவுகளை எட்டும் என்றும், அங்குள்ள மக்களின் கடின உழைப்பு அவர்களின் திறன் பங்களிப்புடன் இந்தியா முன்னேறும் என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

*மியான்மர்* (14)

மியான்மரின் மண்டலே அருகே 5.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் இன்று ஏற்பட்டது. வெள்ளிக்கிழமை ஏற்பட்ட 7.7 ரிக்டர் அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து 2 வது முறையாக இன்று காலை இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. முன்னதாக, மியான்மரில் நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 644 ஆக உயர்ந்துள்ளது. இதனால் ஏராளமான கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. நகரின் விமான நிலையம் உட்பட பல முக்கிய உள்கட்டமைப்புகளும் சேதமடைந்துள்ளன. இதனிடையே, இந்தியா சார்பில், 52 டன் பேரிடர் நிவாரண பொருட்கள்,

மனிதாபிமான உதவிகள், தேடல் மற்றும் மீட்புக் குழுக்கள் ஆகியவை ஆபரேஷன் பிரம்மாவின் ஒரு பகுதியாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இந்திய கடற்படை கப்பல்களின் மூலம் அந்தமான் நிகோபார் வழியாக அனுப்பப்பட்டுள்ளது. 118 உறுப்பினர்கள் கொண்ட இந்திய ராணுவ கள மருத்துவமனை பிரிவுடன் 2 சி-17 விமானங்கள் தரையிரங்கி உள்ளதாக மத்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் திரு ரந்தீர் ஜெய்ஸ்வால் சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

*தலைவர்கள் வாழ்த்து* (15)

புதுச்சேரியில் உள்ள தெலுங்கு மற்றும் கன்னட மொழி பேசும் மக்களுக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் யுகாதி வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், வசந்த காலத்தின் வருகையை குறிக்கும் இந்த புத்தாண்டு தினம் நமது பாரம்பரியம் மற்றும் பண்பாட்டின் அடையாளமாக கொண்டாடப்படுவதாகவும், இந்த திருநாள் அனைவரது வாழ்விலும், மகிழ்ச்சியையும், அமைதியையும் நிறைக்கட்டும் என்று வாழ்த்துவதாக தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நாளை கொண்டாடப்பட உள்ள புனித ரமலான் பண்டிகையை ஒட்டி, புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். தீவிர நோன்புடன், பக்தியில் ஈடுபடுவதையும், மனத் தூய்மை, பொறுமை, சுய ஒழுக்கத்தை பேணுவதை நோக்கமாக கொண்ட இப் புனித ரமலான் தினத்தை முன்னிட்டு அனைத்து மக்களுக்கும் வாழ்த்து தெரிவித்துக் கொள்வதாகவும், அனைவரது வாழ்விலும் அன்பு, சகோதரத்துவம், ஈகை, வலிமை, மற்றும் வளமான வாழ்வை கொண்டு வந்து சேர்க்கட்டும் என அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஐபிஎல் ()

ஐபிஎல் டி 20 கிரிக்கெட் தொடரில் இன்று கவுகாத்தியில் இரவு 7.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி ராஜஸ்தான் ராயல்ஸ் அணியுடன் மோதுகிறது.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லி கேப்பிட